**O.S.No.15/2022**

வா.சா.1, திருமதி.பானுமதி
நாள் : 29.01.2026 நேரம் : 12.55 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்ணும் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு கிழக்கே 3ம் பிரதிவாதி வீரலட்சுமியின் வீடு உள்ளது, தெற்கே ரோடும், காலியிடமும் உள்ளது, வடக்கே பூமாலை வீடு உள்ளது, மேற்கே எனது கணவரின் இடத்தில் நாங்கள் கட்டிய வீடு உள்ளது. அதற்கும் மேற்கே சத்தியேந்திரன் வீடு உள்ளது. எனது கணவருக்கு மேற்படி இடம் எவ்வாறு பாத்தியம் என்றால் கிரய பாத்தியம். அந்த கிரய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனக்கு நினைவு இல்லை. ஒருவேலை மேற்படி பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தகப்பனார் எனக்கு கொடுத்த சொத்து. தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா இருந்தது அது தொலைந்துவிட்டது. தற்போது என் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

2)சர்வே எண். 18/37 க்கு கிழக்கே சர்வே எண். 18/41 ஏ 2 என்ற சொத்து தான் வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ல் எனது சொத்தாக நான் குறிப்பிடும் சொத்திற்கு அருகில் பிரதிவாதிகளின் சொத்து இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் சொத்தை மோசடி செய்வதற்காக தவறான சொத்தை எனது சொத்து என்று குறிப்பிட்டு வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு சொத்தை அளவீடு செய்வதற்கு மனு செய்தார் என்றாலும், அதில் நானும் தரப்பினராக இருந்து

எதிர்வழக்காடினேன் என்றாலும் சரியல்ல. மேற்படி மனுவில் என்னையும் தரப்பினராக சேர்க்க சொல்லி மனு செய்து அதில் நான் எதிர்வழக்காடினேன் என்றாலும் அதை ஒப்பு கொண்டால் எனது வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3)மேற்படி உயர்நீதிமன்ற வழக்கின் உத்தரவுப்படி தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டது என்றாலும், அப்போது நாங்களும் உடன் இருந்தோம் என்றாலும் சரிதான். மேற்கண்ட அளவீட்டில் எனது இரண்டு கழிவறைகளும் ஆக்கிரமிப்பில் இருந்ததாக சொல்லப்பட்டதில் நான் ஒரு கழிவறையை மட்டும் இடித்துவிட்டு ஒரு கழிவறையை இடிக்காமல் வைத்து கொண்டேன் என்றால் ஒரு கழிவறை தானாக இடிந்துவிட்டது நான் இடிக்கவில்லை. மேற்படி கழிவறை மற்றும் மரங்கள் இருப்பது 3ம் பிரதிவாதியின் கிரய சொத்து என்றால் சரியல்ல. மீதமுள்ள கழிவறையையும் இடிக்க சொல்லி பிரதிவாதிகளும் அளவையர்களும் வர்புறுத்தியதால் தான் அதிலிருந்து தப்பிபதற்காக பொய்யான காரணங்களோடு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4)3ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் மேற்கில் எத்தனை அடி காலியிடம் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் மேற்படி வீடு தவிர வீட்டிற்கும் மேற்கில் சுமார் 3 அடி காலியிடம் தவிர மற்ற இடம் அனைத்தும் என்னுடையது. நீதிமன்றம் மூலம் தாவா சொத்தை அளந்து பிரித்து கொள்ள மனு செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பிரதிவாதிகள் தரப்பில் மனு செய்து தாவா சொத்தை அளப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. நான் பிரதிவாதிகள் இடத்தை ஆக்கிரமித்து கழிவறை கட்டியுள்ளதால் தான் அளவீடு செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் ஆட்சேபனை இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அளவீடு செய்தால் தாவா சொத்து 3ம் பிரதிவாதியின் இடத்திற்குள் வந்தால் அதை இடிப்பதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை.

5)தாவா சொத்தில் உள்ள மரங்கள் 3ம் பிரதிவாதி வைத்த மரம் என்றாலும்

கழிவறை மட்டும் நான் 3ம் பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமித்து கட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் மேற்கு பக்கத்தில் 2 தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அது என்னுடைய மரங்கள். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தென்னை மரம் தான் என்று குறிப்பிட்டுள்ளேன் இரண்டு தென்னை மரங்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியின் இடத்தில் தான் கழிவறையும் மரங்களும் உள்ளதாக எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதற்கு நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் எந்த சர்வே எண்ணில் உள்ளது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

6)எங்கள் கிராமத்தில் சேது மகன் ராமதாஸ் என்று எனது கணவர் மட்டும் தான் உள்ளாரா அல்லது இதே பெயரில் வேறு நபர் உள்ளாரா என்றால் எனது கணவர் மட்டும் தான் உள்ளார். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கிரயம் வாங்கிய பத்திரத்தில் எனது கணவர் உள் சாட்சியாகவும், வெளி சாட்சியாகவும் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் கிரய சொத்தை மோசடி செய்வதற்காக எனது கணவர் மூலமாக தாலுகா அலுவலத்திற்கு சென்று புலப்படத்தை திருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்தில் ஆகையற் வடமேற்கில் 3ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளதை புலப்படத்தில் உட்பிரிவு சரியாக செய்யப்பட்டதில் எனது கணவர் தலையிட்டு அசல் உட்பிரிவை முறைகேடாக அழித்துவிட்டு 3ம் பிரதிவாதியின் கிரய சொத்திற்கும் கிழக்கில் உட்பிரிவு செய்ததது போல் வட்டாட்சியர் அலுவலக ஊழியர்களை சரிகட்டி நாங்கள் மோசடி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7)தாவா சொத்திற்குரிய கணினி புலப்படத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்திற்குரிய கணினி புலப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நாங்கள் புலப்படத்தை திருத்திய விவரம் தெரிந்துவிடும் என்பதால் தான் கணினி புலப்படத்தை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும்,

பிரதிவாதிகளுக்கும் இடையில் உள்ள எல்லை மட்டுமே பிரச்சனை என்பதால் தாவா சொத்தை அளவீடு செய்தால் மட்டுமே உண்மையை கண்டறிய முடியும் என்றாலும், அவ்வாறு உண்மையை கண்டறிந்தால் எனக்கு பாதகமாக முடியும் என்பதால் நாங்கள் அளப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் மேற்கில் கிழமேல் 20 அடி, தென்வடல் 68 அடி அளவிற்கு நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

8)பிராது சொத்து விவரத்தில் எனது பட்டாவில் கண்டபடி சர்வே எண்ணை குறிப்பிட்டுவிட்டு ஸ்தலத்தில் 3ம் பிரதிவாதியின் கிரய இடத்தை நான் தப்பு பாத்தியம் கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. பிராது சொத்து விவரத்தில் கண்டுள்ளவற்றிற்கு மாறாக 3ம் பிரதிவாதியின் சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்திருப்பதால் பிரதிவாதிகளின் எதிர் கோரிக்கை படி எனது ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.30PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.29 16:26:41 +0530